உ

திருச்சிற்றம்பலம்



## அறிமுகம்

ஒரு கருணைப் பேரரசினுக்கு வள்ளலே பிரதமர். அவர் மக்கள் குலம் மற்றும் மன்னுயிர் குலம் மேம்பட நின்று வழி வகை காட்டியதே சாலையும், சபையும், அந்தத் திருச்சபையின் சிங்கார ஸ்டைல் அமைப்பை இங்குக் கோடிட்டு காட்டியுள்ளோம்.

ஆசிரியர் குழுவினர்
வள்ளலார் கொள்கை நெறி பரப்பு
இயக்கம்

Scanned by CamScanner

இராமலிங்கர் துணை

## சத்திய ஞானசபை பின்னணி

1) பின்னணி என்றால் என்ன?

பின்புலம் என்று அர்த்தம்.

2) பின்னணியை விட பின்புலம் என்றது புரியவில்லையே?

அப்படியானால் பின்புலம் என்பது சபை கட்டப்பட்ட காரிய காரணங்கள்.

3) சபை எப்போது கட்டப் பெற்றது?

1872ல்

4) எங்கே?

வடலூரில்

5) யார் கட்டியது?

வள்ளல் ஐயா.

6) காரணம்?

ஆண்டவர் உத்தரவு.

7) அது என்ன உத்தரவு?

தில்லைச் சிதம்பரத்தில் ஆனந்த நடனம் ஆடினோம் ஆகவே



8) சரி.

வடலூர் சிதம்பரத்தில் அருள் நடனம் ஆட வேண்டும்.

9) வடலூர் சிதம்பரம் என்பது எது?

அது பார்வதிபுரம்

10) சரி அதற்கு என்ன?

அந்த சிதம்பரக் கோயில் சபை போலவே வடலூரிலும் சபை கட்ட வேண்டும் என்பதே.

11) அது என்ன சபை?

அது சத்திய ஞான சபை.

12) சத்திய ஞானசபை என்றால்?

மெய்ஞ்ஞானத் திருச்சபை.

13) அது எதற்கு?

அது தான் அருள் நடனம் ஆடுவதற்கு.

14) அருள் நடனம் என்பது எது?

ஆனந்த நடனத்தை விட உயர்ந்தது.

15) அருள் ஆனந்த நடனத்தின் பயன் என்ன?

ஆனந்த நடனம் ஆருயிர்களுக்கு எல்லாம் இன்பம் தருவது.



Scanned by CamScanner

16) அருள் நடனத்தின் பயன் என்ன?
அந்த ஆருயிர்கள் ஒவ்வொன்றையும் ஆண்டவன் ஆக்குவது.
17) இது என்ன கப்சா ஐயா?
இது வள்ளல் ஐயா கப்சா
18) அவரும் கப்சா விடுவாரா?
அது கப்சா அல்ல.
19) அப்ப செமியா?
ஆமாம், ஆனால் ஆண்டவரோ முழு செமி
20) சரி, விஷயத்திற்கு வாரும் – சபை எப்படி இருக்கும்?
எண்கோண வடிவில் இருக்கும்.
21) என்ன நிறம்?
தாமரை நிறம்
22) சபை கட்டுவதற்கு முன் என்ன நடந்தது?
சன்மார்க்க சங்கக் கூட்டம் நடந்தது



23) அது எங்கே நடந்தது?
அது வடலூர் சத்திய தருமச்சாலையில்
24) யார் தலைமையில்? யார் கூட்டினார்கள்?
வள்ளல் பெருமான் தலைமையில், வள்ளலே
25) யார் கலந்து கொண்டது?
அன்பர்களும், அறிஞர்களும், ஆதரவாளர்களும்.
26) அதில் ஐயா தெரிவித்தது என்ன?
ஆண்டவர் கட்டளைப்படி அருள் நடனம் பற்றி.
27)மேலும் ஐயா தெரிவித்தது என்ன?
ஆண்டவர் கட்டளைப்படி அருள் நடனம் ஆடுவதற்கு வடலூரிலும் ஒரு திருசபை கட்ட வேண்டும் என்றார்கள்.
28) பணம் வேண்டாமா?
பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கை தான்



Scanned by CamScanner

29) அது எப்படிக் கிடைக்கும்?

ஆண்டவர் தானே சபை கட்டச் சொல்கிறார். அவரே அதற்கான உதவியையும் உண்டாக்கித் தருவார் என்ற நம்பிக்கை தான்.

30) யார் உதவி செய்வார்கள்?

அன்பர்கள், வி.ஐ.பி க்கள், பொதுமக்கள், இப்படி இப்படி

31) வி.ஐ.பி க்கள் யார் யார்?

கோடீஸ்வரர் மயிலாப்பூர் சோமு செட்டியார்.

32) அப்புறம்?

கோடீஸ்வரர் கூடலூர் அப்பாசாமி செட்டியார்.

33) பின்பு?

குபேர வேந்தர் வேட்டவலம் ஜமீன்தார்.

34) பிறகு?

பார்வதிபுரம் லட்சாதிபதி வேங்கட படையாட்சி.



35) அன்பர்கள் யார்?

லட்சாதிபதி சேலம் ஹவுஸ் சென்னை ஞானாம்பாள்.

36) பிற்பாடு?

கருங்குழி மணியக்காரர்.

37) அதன் பிறகு?

மேட்டுக்குப்பம் மணியம்.

38) அறிஞர்கள்?

தொழுவூர் வேலாயுதனார்.

39) தொண்டர்கள்?

கல்பட்டு ஐயா.

40) அந்தக் கூட்டத்தில் என்ன முடிவு செய்தார்கள்?

எப்படியும் சபை கட்டி விடுவது என்று முடிவு செய்தார்கள்.

41) பணத்திற்கு வழி?

பணக்காரர்கள் தருவது.

42) பிறகு யார் தருவது?

அப்புறம் ஆண்டவர் தருவது.

43) அதை எப்படித் தர முடியும்?
தங்கம் செய்தல் மூலம் தர முடியும்.



Scanned by CamScanner

44) அது குற்றமாச்சே?

இல்லை, ஒரு கணக்கு நோட்டே போட்டு தங்கம் தயாரிக்கப்பட்டது.

45) பணம் கிடைத்ததா?

ஏறக்குறைய ஒரு இலட்சம் வரை கிடைத்தது.

46) அடேயப்பா?

அடேயப்பா தான்.

47) எப்படி வந்தது?

பொதுமக்கள் காட்டிய ஆர்வத்தால் வந்தது,

48) எந்த மாதிரி ஆர்வம் காட்டினார்கள்?

தாமரை மலர்ந்தது போல் காட்டினார்கள்.

49) கட்டுவதற்கு முக்கியஸ்தார் யார்?

சென்னை காண்டிராக்டர் ஆறுமுக முதலியார்.

50) பிளான்?

ஐயா உள்ளத்தில் ஆண்டவர் போட்டுக் காட்டினார்.



51) காட்டிய பிறகு?

அதை ப்ளு பிரிண்ட் செய்து ஐயா வழங்கினார்கள்.

52) யாரிடம்?

சபை நிர்மாணக் கமிட்டியிடம்.

53) எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

1872 ஆனி மாதம் வளர்பிறையில்.

54) பூமி பூசை போட்டார்களா?

போட்டார்கள்.

55) பூமி பூசைக்கு யார் வந்திருந்தார்கள்?

ஆடூர் சபாபதி குருக்கள்

56) ஐயா போதாதா?

போதும்

57) பின் எப்படி?

மரபின்படி நடந்து கொண்டார்கள் ஐயா.

58) அது என்ன மரபு?

சாலை தொடக்க பூசை செய்ய சிதம்பரம் வேங்கட சுப்பு தீட்சிதர் அழைக்கப்பட்டார். அதுபோல சபையும் நடக்கட்டும் என்றிருந்தார்கள்.



Scanned by CamScanner

59) பிறகு ஏன்?

அதைப் பின்பற்றிச் சபைக்கு பூசை செய்ய ஆடூர் சபாபதி சிவாச்சாரியார் அழைக்கப்பட்டார்.

60) அழைத்து?

காயத்திரி மந்திரத்திற்கு அனுபவபூர்வமான அர்த்தம் தெரிவித்தார்கள் ஐயா.

61) அது என்ன வகை மந்திரம்?

அது ஆன்ம தத்துவம் பிரமன் தன்னியல்பு

62) ஆன்ம தத்துவத்திற்கு அடுத்து?

விஷ்ணுவின் தன்னியல்பு தத்துவம்.

63) விஷ்ணு தத்துவத்திற்கு அடுத்து?

சிவ தத்துவம்.உருத்திரன் தன்னியல்பு

64) இவை எதற்கு?

இவை தான் 36 தத்துவங்கள். இவை தான் நமது உடலமைப்பு. இது தான் காயத்திரி மந்திர உண்மை என்று தெரிவித்தார்கள்.



65) தெரிவித்து?

அதன்படி ஆன்மானுபவம் உண்டானால் – பிரம்மஞானம் அடையலாம் என்றார்கள்.

66) பிரம்ம ஞானம் என்பது என்ன?

வேதாந்த ஞானம்

67) வேதாந்த ஞானம் என்பது?

தத்துவமசி

68) தத்துவமசி ஞானம் எதனால் வரும்?

ஓதயாத் என்னும் ஜீவகாருணிய சீலத்தால் வரும்.

69) அப்புறம் ஐயா என்ன சொன்னார்கள். ஆடூர் சபாபதி குருக்களுக்கு?

சன்மார்க்க சங்கத்தில் சேர வேண்டும் என்றார்கள்.

70) அவர் சம்மதித்தாரா?

சம்மதியாமல் சம்மதித்தார்.

71) காரணம்?

ஐயா சொல்வதும் சரி, ஆரணம் செல்வதும் சரி என்பதால்.



Scanned by CamScanner

72) பிறகு என்ன நடந்தது?

1871 ஆனி மாதத்தில் பூமி பூஜை நடந்தது. சபை தை மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

73) மெட்டீரியல்ஸ் வேண்டாமா?

அவையெல்லாம் பம்பாயில் வாங்கப்பட்டது.

74) எது போல்?

கொடி மரம் சென்னையில் சபைக்கு வாங்கப்பட்டது போல

75) அப்புறம் என்ன வாங்கினார்கள்?

சபைக்குச் செப்புத் தகடு.

76) அப்புறம் வாங்கியது என்ன?

சபையில் ஜோதி காட்டும் பெரிய கண்ணாடி.

77) அப்புறம் வாங்கியது என்ன?

சபையில் கண்ணாடிக்குப் பின்புறம் வைக்கும் தீப அகண்டம்

78) அகண்டத்திற்கு பிற்பாடு என்ன வாங்கினார்கள்?

கப்பலுக்குப் போடும் நங்கூரச் சங்கிலி.



79) அது ஏன்?

அது தான் தற்போது சபையைச் சுற்றிப் போடப்பட்டுள்ள பாதுகாப்பு வேலி.

80) அது எப்படித் துருப்பிடிக்காமல் உள்ளது?

பானை பிடித்தவள் பாக்கியசாலி அதனால்.

81) சரி, தங்கம் எப்படி செய்ய முடிந்தது?

அது செய்யப்படவில்லை, விளைந்தது.

82) இது என்ன கயிறு?

பாம்பே டையிங் கயிறு.

83) சரி விவரம் கூறும்?

பெரிய வாணலில் தண்ணீர் கொதிக்குமாம். அதில் பெருமான் முப்பூ மருந்தையும் திரு நீறும் இடுவார்களாம்.

84) இட்டு?

சிறிய குருப்பி கொண்டு கிளறச் செய்வார்களாம்.



Scanned by CamScanner

85) கிளறினால் என்ன ஆகும்?

கஞ்சியாகி, கூழாகி, பாகு ஆகி, கேக் ஆகுமாம்.

86) ஆன பிறகு?

அதைப் பொன் பாளமாக்கித் தருவார்களாம்.

87) யார் வசம்?

அந்தக் காண்டிராக்டர் ஆறுமுக முதலியார் வசம்.

88) அது எங்கே பணமாக்கப் பெறும்?

அது பம்பாயில் பணமாக்கப் பெறும்.

89) அதற்குக் கணக்கு உண்டா?

ஓ, அதுவும் சந்தாக் கணக்கு நோட்டில் எழுதப்பட்டிருந்ததாம்.

90) என்னவென்று?

சிவயோக சித்தியால் வந்த வரவு என்று.

91) அந்தப் புராணம் எல்லாம் ஏன்?

பற்றாக்குறையை ஈடு செய்ய.

92) அப்போது ஆண்டவரும் உடந்தையாகியுள்ளார், இல்லையா?

உண்மை தான்.



93) பிறகு என்ன வாங்கப்பட்டது?

சபை முன்புற வாயில்கள் அமைக்கப் பளிங்கு கற்கள்.

94) எப்போது சபை வேலை முடிந்தது?

1872 மார்கழி மாதத்தில்.

95) தை மாதத்தில்?

தைப்பூச முதல் ஜோதி தரிசனம் நடைபெற்றது.

96) ஐயா காட்டினார்களா?

மேட்டுக்குப்பத்தில் இருந்தபடியே காண்பிக்கச் செய்தார்கள்.

97) பத்திரிக்கை அடித்தார்களா?

ஆமாம், பல மொழியில் அடித்தார்களாம்.

98) அப்புறம்?

அது சத்திய தருமச்சாலை விளம்பரம் போலவே சத்திய ஞான சபை விளம்பரமாக்கப்பட்டது, வழங்கப்பட்டது.

99) சபைக்குப் பூசகர் யார்?

திருநெல்வேலி மழைச் சாமியார் 72க்கு மேல்.



Scanned by CamScanner

100) 12 வயதிற்குள்?

திருப்பாதிரிப்புலியூர் தேரடி வீதி ஓதுவார் இரத்தினம் என்பவர்.

101) இவ்வளவு செய்திகளா உள்ளன?

இது போல? இன்னும் இரு மடங்கு செய்திகள் உள்ளன.

திருச்சிற்றம்பலம்.

K.S பிரிண்டர்ஸ்,
வடலூர். செல்: 9443576739

Scanned by CamScanner